<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்</u>

<u>நாள். 21.02.2024</u>
<u>O.S.133/2019</u>
<u>வா.சா.1 ராஜ துரை</u>
<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் விவசயாம் செய்கிறேன். நான் 35,40 ஆண்டுகளாக விவசாயம் செய்கிறேன். என் தாத்தாவின் பெயர் பொன்யாயிரம் நாடார். அவருக்கு ஊர் செட்டிவிளை. பிரச்சனைக்குரிய கோவில் பொத்தையடியில் உள்ளது. பொன்னார் நாடார் யார் என்றால் எங்கள் குடும்பத்தை சார்ந்தவர் அல்ல. பொன்னார் நாடார் எந்த ஊரைச் சேர்ந்தவர் என்று தெரியாது. அவருக்கு எத்தனை பிள்ளைகள் என்று தெரியாது. என் அப்பா தங்கநாடாருக்கு 4 ஆண்பிள்ளைகள், 2 பெண் பிள்ளைகள்.

வழக்கு பட்டிகை சொத்து எனக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் எங்கள் மூதாதையர் வழி கிடைத்தது. என் தாத்தா பொன்னாயிரம் நாடாருக்கு உரிய சொத்து. பொன்னாயிரம் நாடாருக்கு பாத்தியப்பட்ட சொ்த்து எனக் காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என் தாத்தா என் அப்பாவிற்கு எழுதி கொடுத்த ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். என் தாத்தா என் அப்பாவிற்கு எந்த ஆண்டு ஆவணம் எழுதி கொடுத்தார் என்றால் ஆண்டு தெரியாது, பத்திர எண் தெரியாது. அவ்வாறு பரம்பரையாக வந்து கொண்டிருக்கிறது. நாங்கள் 2013 ம் ஆண்டு பாகம் செய்தோம்.

சுப்பையா நாடார் மகன் கைலாசம் தெரியாது. என் அப்பா தங்கநாடார் கைலாசம் நாடாரிடம் சொத்து கிரையம் வாங்கிய விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ 1 பாகப்பத்திரத்தில் 1965ம் ஆண்டு 1664 என்று குறிப்பிடப்பட்டுள்ள கிரைய ஆவணம் எங்களிடம் தான் உள்ளது. அந்த

கிரைய ஆவணத்தில் என் அப்பா எவ்வளவு விஸ்தீரணம் கிரையம் வாங்கினார் என்றால் 27 1/2 சென்ட் கிரையம் வாங்கினார் அதுபோக என் அப்பாவிற்கு 27 1/2 சென்ட் சொத்து.

அந்த கிரைய ஆவணத்தில் உள்ள 27 1/2 சென்ட்டிற்கு மேற்கு பக்கம் உள்ள 27 1/2 சென்ட் சொத்து என் அப்பாவிற்கு பாத்தியப்பட்டது. மேற்கு பக்கம் உள்ள 27 1/2 சென்ட் சொத்தை என் அப்பா அனுபவித்து வந்தார் எனக் காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்ய முடியுமா என்றால் அதற்கான பட்டா, சிட்டா, அடங்கல் தாக்கல் செய்துள்ளேன். 1965 ம் ஆண்டு என் அப்பா கைலாசம் நாடாரிடம் கிரையம் வாங்கிய ஆவணத்தில் சொல்லிய விவரங்கள் உண்மையானது.

என் அப்பா கிரையம் வாங்கிய சொத்தை என்ன செய்தார் என்றால் என் அப்பா இறந்து போனார் . அதன் பின் என் அம்மா பிள்ளைகள் அனைவருக்கும் கோவிலுக்கும் பாகம் வைத்து கொடுத்தார். 1965 ம் ஆண்டு என் அப்பா கிரையம் வாங்கிய சொத்திற்கு எல்கை இருந்தது. அந்த கிரையம் வாங்கிய 27 1/2 சென்ட்டிற்கு தெற்கே ஆறு, மேற்கே எங்கள் சொத்து, வடக்கே திரவியம் நாடார் மனை, கிழக்கே பொத்தையடி ஊரைச் சார்ந்த நபர் சொத்து.

பிரச்சனைக்குரிய இடம் கோவில் புபறம் போக்கில் இருபபதாக நான் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. புறம்போக்கு நிலத்தில் உள்ள கோவிலை எப்போது அகற்றினார்கள் என்றால் 2019 ம் ஆண்டு அகற்றினார்கள். இந்த வழக்கு தாக்கல் செய்து ஒரு ஆண்டு கழித்து அகற்றப்பட்டது. அதில் இருநத மின்இடணைப்பு மற்றும் மீட்டர் இருக்கிறதா என்றால ஆம். தற்போது அங்கு தான் உள்ளது

என்றால் ஆம. அந்த கட்டிடத்தை இடிப்பதற்கு முன் அதே இடத்தில் தான் இருந்தது.

மொத்தம் எத்தனை கட்டிடங்கள் புறம்போக்கில் இருக்கிறது என இடிக்கப்பட்டது என்றால் ஒரு கட்டிடம். அதில் கோவில் இருந்ததா என்றால் ஒரு சிறிய கோவில் இருந்தது. ஆணையர் அறிக்கை புகைப்படத்தில் (11 வது எண் புகைப்படம்) அந்த இடிக்கப்பட்ட இடம் தெரிகிறது என்றால் சரிதான். அந்த இடிக்கப்பட்ட கட்டிடம் கான்கீரிட் போடப்பட்டது என்றால் சரிதான். ஒத்தபனை இசக்கியம்மன் கோவில் சுவரையும் சேர்த்து தான் உடைத்திருந்தது என்றால் சரிதான். நீதிமன்ற சான்று ஆவணம் 3 புகைப்படங்களில் (16 வது எண் புகைப்படம்) மீட்டர் இருந்த இடம் உடைக்கப்பட்டு கிடக்கிறது என்றால் சரிதான்.

அந்த கோவிலை உடைத்ததற்கு நான் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. பிரதிவாதிகளும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. வா.சா.ஆ 8 புகைப்படங்கள் இடிப்பதற்கு முன்பு உள்ள புகைப்படங்கள் என்றால சரிதான். அதில் முதல் புகைப்படத்தில் காண்பது போல் இசக்கியம்மன் கோவிலும் இடிக்கப்பட்ட கோவிலும் இருந்தது என்றால சரிதான். 4 வது புகைப்படத்தில் ஒத்தப்பனை இசக்கியம்மன் கோவிலை பூட்டுபோட்டு பூட்டுவது யார் என்றால் என் மகன். அவர் பெயர் நவநீதகிருஷ்ணன்.

அந்த பூட்டு போட்ட சமயம் போலீசார் வந்தார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ 8 புகைப்படங்கள் எடுத்த தேதி ஞாபகம் இல்லை. தற்போது கோவில் இருக்கும் புல எண் 219/1 ஏ. 219/1 ஏ என எப்போது உட்பிரிவு செய்யப்பட்டது என்றால எங்களுக்கு பாகம் வைத்தபின் உட்பிரிவு செய்யப்பட்டது. உட்பிரிவு செய்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அது வா.சா.ஆ 4 ஆகும். வா.சா.ஆ 1 பாக பத்திரத்தில்

1965ம் ஆண்டு என் அப்பா கிரையம் வாங்கிய 27 1/2 சென்ட்டிற்கு மேற்கு பக்கம் சொத்தை பாகம் செய்ததோம் என்றால் மொத்தம் சொத்து 55 சென்ட்யை பாகம் செய்தோம்.

55 சென்ட்டில் யார் யாருக்கு எவ்வளவு பாகம் கொடுக்கப்பட்டது என்றால் சகோதரர்கள் ஒவ்வொருவருக்கும் 5 சென்ட் வீதம் மொத்தம் 20 சென்ட்டும், கோவிலுக்கு 7 சென்ட்டும், என் சகோதரி தமிழரசிக்கு 28 சென்ட் கொடுத்திருந்தது. வா.சா.ஆ 1 ஆவணத்தில் அவ்வாறு எங்கு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு வாசிக்க தெரியவில்லை நான் தமிழ் கொஞ்சம் கொஞ்சம் படிப்பேன்.

என் அப்பாவே 28 சென்ட் தமிழரசிக்கு எழுதி கொடுத்துவிட்டார். அவ்வாறு எப்போது எழுதி கொடுத்தார் என்றால் தேதி, மாதம், வருடம் ஞாபகம் இல்லை. நான் சொன்னது போல் வா.சா.ஆ 1 ஆவணத்தில் 55 சென்ட் குறித்து பாகம் செய்யப்படவில்லை என்றாலும் அந்த ஆவணத்தை நான் வாசித்தால் அது தெரியவரும் என்பதால் படிக்க தெரியாது என்று சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

வா.சா.ஆ 1 ல் 2 வது பாகம் பொன்னுசாமி பாகம் எனப்போட்டுள்ளது. அவர் என் அண்ணன். வா.சா.ஆ 1 ஆவணத்தில குறிப்பிட்டுள்ள அளவுகளின் படி தான் உட்பிரிவு செய்யப்பட்டது. வா.சா.ஆ 4 ஆவணத்தின் வா.சா.ஆ 1 ஆவணத்தின் படி பொன்னுசாமிக்கு 1பி எனக் குறிப்பிடப்பட்டுள்ள இடம் கொடுக்கப்பட்டது. பொன்னுசாமி இடத்திற்கு மேற்கே ஷட்டர் உள்ளது என்றால் ஷட்டர் இல்லை. ஒரு கால்வாய் எங்கள் பட்டா இடத்தில போகிறது. அந்த கால்வாயின் வீதி 1 1/2 அடி இருக்கும். அந்த கால்வாய் கோவில் இருககும் இடத்தையும் பொன்னுசாமி இடத்தையும் பிரிக்க கூடியது என்றால் சரிதான்.

வா.சா.ஆ 1 பாகப் பத்திரத்தில் அந்த கால்வாய் குறித்து சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழகககு பிராதிலும் கோவில் இருக்கும் இடத்திற்கும் பொன்னுசாமி இடத்திற்கும் இடையே கால் செல்வதாக சொல்லவில்லை என்றால் சரிதான்.

அந்த கால்வாய் தண்ணீர் 20 ஏக்கருக்கு பாயும் என்றால் முன்பு 4 ஏக்கருக்கு பாயும் தற்போது 2 ஏக்கருக்கு பாயும். கோவிலில் கடைசியாக 2019 ம் ஆண்டு திருவிழா நடைபெற்றது. சாட்சியிடம் புகைப்படங்கள் காட்டப்பட்டு அந்த புகைப்படங்களில் கண்டவாறு திருவிழா சமயத்தில் கோவில் இருந்தது என்றால் சாட்சி ஆம் என ஒப்புக்கொண்டார். 2019 ம் ஆணடு திருவிழா சமயத்தில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் என்று தெரிவித்தார். அவை பி.சா.ஆ 1 ஆகும். (24 புகைப்படங்கள் மற்றும் குறுந்தகடு)

புகைப்படத்தில் (4 ம் எண் புகைப்படம் ) இருப்பவர்கள் அனைத்து ஊர் மக்கள் உள்ளனர். புகைப்படத்தில் வேல் கம்புடன் சாமி ஆடும் நபர் முனுசாமி அவர் தகப்பனார் பெயர் துரை. அவர் பிரதிவாதி குடும்பத்தை சேர்ந்தவரா என்றால் இல்லை. அவர் எங்கள் குடும்பத்தையும் சார்ந்தவர் அல்ல. வெளியூர் ஆள். 5 ம் புகைப்படத்தில் குனிந்து இருப்பவர் வெளியூர் ஆள். மற்றொரு நபரும் வெளியூர் ஆள். பிரதிவாதி அல்ல. மற்றொரு புகைப்படத்தில் 3 நபர்கள் இருப்பதில் ஒருவர் பாலன், மற்றொருவர் ஆதித்தன் அவர்கள் இருவரும் பிரதிவாதி குடும்பத்தை சேர்ந்தவர்கள்.

மற்றொரு 10 வது புகைப்படத்தில் சுருள் கொடுக்கும் பெண்மனி யார் எனத் தெரியாது. நேமிசம் கொடுக்கிறார். நேமிசம் வாங்குபவரும் பார் எனத் தெரியாது. பந்தல் அமைத்தவர் யார் எனத் தெரியாது. மந்தாளம் புதூர் ஊரைச் சார்ந்த நபர் ஆவார். அந்த புகைப்படத்தில் எங்கள் குடும்பத்தைச்

சார்ந்தவர்கள் யாரும் இருக்கிறார்களா என்றால இல்லை. அடித்து விரட்டிவிட்டாகள். அந்த திருவிழா சமயத்தில போலுசார் யாரும் வரவில்லை. அந்த திருவிழாவிற்கு பின்பும் கோவிலில் பூசை நடந்து வந்தது என்றால் நாங்கள் நடத்தி வருகிறோம். புகைப்படத்தில் காணப்படும் கல்வெட்டு அந்த கோவிலில் உள்ளது என்றால் சரிதான். அந்த கல்வெட்டில் குறிப்பிட்டுள்ள செல்வராஜ் மருமகன் பொன் சுந்தர் அந்த கோவிலைக் கட்டிய நபர் என்றால் சரிதான்.

அந்த கோவிலில் மொத்தம் 2 கல்வெட்டுகள் உள்ளன. வா.சா.ஆ 8 புகைப்படத்தில் காணப்படும் கல்வெட்டில் பெயர் ஊர் தெரியவில்லை என்றாலும் அழிக்கப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். பி.சா.ஆ 1 புகைப்படத்தில் வெளியுரைச் சார்ந்தவர்கள் என சொல்லும் நபர்கள் யார் யார் வெளியூரைச் சார்ந்தவர் என்று என்னால் செல்லமுடியாது என்றால் சரிதான். கோவிலுக்கு பஞ்சாயத்து வரி உண்டு என்றால் இல்லை. கோவிலுக்கு கட்டிட எண் உள்ளது. கட்டிட எண் எனக்கு மறந்துவிட்டது. என்ன பஞ்சாயத்து என்றால் வடக்குதாமரைக்குளம் பஞ்சாயத்து.

வடக்குதாமரைக்குளம் பஞ்சாயத்தில் கோவில் இருப்பதாக காட்ட ஆவணம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் வாங்கி தருகிறேன்.

(பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)